# உழுகிறவன் அறுக்கிறவனைத்

## தொடர்ந்து பிடிப்பான்...



# உழுகிறவன் அறுக்கிறவனைத் தொடர்ந்து பிடிப்பான்

[A.O. ஹட்ஸன், மாதாந்திர வேத ஆய்வு, நவம்பர்/டிசம்பர் 1992, பக்கம் 123]

**"இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப்பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் தொடர்ந்துபிடித்து, பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்." (ஆமோஸ் 9:13, 14)**

# நம் காலத்திற்கான ஓர் உவமை

ஆமோஸ் ஒரு நாட்டுபுறவாசியும் காட்டத்திப்பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தான் (ஆமோஸ் 7:14).

அவன் தீர்க்கதரிசியும், தேவன் மீது ஆழ்ந்த பக்தி கொண்ட மனிதனும், பூமியின் மேல் தேவனுடைய ராஜ்ஜியம் வர விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவனுமாய் இருந்தான்.



ஆதலால், தானியேலைப் போல ஒரு ராணுவத்தைச் சார்ந்த அமைப்பிலோ, எசேக்கியேலைப் போல ஆசாரியத்துவம், ஆலயம் சார்ந்த அமைப்பிலோ இல்லாமல் விவசாயம் மற்றும் மந்தை வளர்ப்பு...

ஆகியவற்றை சார்ந்தே அவனது அந்த ராஜ்யத்தின் தரிசனங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதில் ஆச்சரியமில்லை.


இதினால்தான், இன்றைய நாளில் நமக்கு அதிக ஆர்வத்தைத் தரக்கூடிய அந்த கடைசி நாளின் சிறப்பம்சத்தை எடுத்துக்காட்டக்கூடிய நேசமான ஒரு சிறிய உவமையை அவன் மூலமாக பரிசுத்த ஆவி நமக்கு தந்துள்ளது. நம் கர்த்தர் என்ன செய்கிறார் என்பதை அறிந்துகொள்வதில் நாம் ஞானமுள்ள ஊழியக்காரர்களாக இருக்கிறோமா என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்ற சத்தியத்தைக் குறியீட்டு மொழியில் விளக்குகிறது.

முன்பு சம்பவித்திராதவைகளில் ஒன்றான, உலகப்பிரகாரமான காரியங்களில் **செழிப்பு** என்பதுதான் இந்த காட்சியின் பொதுவான பின்னணியாகும். உழுகிற காலத்திலும்கூட நீடித்திருக்கத்தக்கதாக, அறுவடையானது மிகவும் ஏராளமாயுள்ளது.

இஸ்ரயேலில் பொதுவாக, அறுவடையானது மே மாதத்தில் துவங்கி ஜூன் மாதத்துடன் முடிவடையும்.
அதே நேரத்தில் அக்டோபர் மாதம்வரைக்கும் கூட நிலத்தை உழுதல் துவங்கவில்லை என்றால், இது ஒரு ஆச்சரியமான அறுவடையாகவே இருக்க வேண்டும்.



திராட்சைப்பழங்கள் பறிக்கும் காலமானது பொதுவாக ஆகஸ்ட் மாதத்தில் துவங்கி செப்டம்பர் மாதத்தில் முடியும். இக்காலத்தில் பறிக்கப்படும் திராட்சைப்பழங்கள் மிகவும் ஏராளமாக இருப்பதால் ஆலையில் மிதித்துப் பிழியப்படும் அந்த உயர்தர திராட்சைப்பழங்களைப் புதிய திராட்சை ரசமாக மாற்றக்கூடிய வேலையானது விதைப்பின் வேலை துவங்கக்கூடிய நவம்பர் மாதத்திலும் கூட தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் அதிகமான செழிப்பும் வரவிருக்கிறது.



எப்படியெனில், மேற்கூறிய எல்லாவற்றின் விளைவாக, திராட்சைக்கொடிகள் வளருகின்ற மலைச்சரிவில் இனிமையான (எபிரேயம்: புதிய) திராட்சை ரசம் வழியும். விதைக்கப்பட்டதின் விளைவாக வளர்ந்திருக்கும் திராட்சைக்கொடிகளின் ஆற்றலையும், அதைத்தொடர்ந்து வரக்கூடிய திராட்சைப்பழங்ளின் அதிக விளைச்சலையும் நோக்கும்போது, ஏதோ அந்த பர்வதங்கள் திராட்சை ரசத்தை வழியச்செய்வது போலுள்ளது. அதே சமயத்தில், மேடுகள் (**shephelah** அல்லது யூதே யாவின் சமவெளிகள்) எல்லாம் கரையும் (எபிரேயம்: கீழ்நோக்கிப் பாயும்) என்பது, பரந்துவிரிந்த சோலைகளில் உயர்ந்து நிற்கும் தானியத்தின்

வழியாய் காற்று வீசும்போது, காற்றின் சிற்றலை விளைவின் (**rippling effect of the wind** –– தானியக்கதிர்கள் மேல் காற்று வீசினால் அவைகள் காற்றில் நன்றாக அங்குமிங்கும் ஆடும். அப்போது நாம் அதைப்பார்த்தால், தண்ணீருக்குள் ஒரு பொருள் விழும்போது அதில் சிறு சிறு அலைகள் அடுத்தடுத்து எப்படி உண்டாகுமோ, அவ்வாறு கதிர்கள் மேலேயும் அலை உருவாகும். இதுவே அந்த விளைவாகும்) காரணமாக, சற்று தொலைவிலிருந்து பார்க்கும்போது அந்த தானியங்கள் மலைச்சரிவிலிருந்து அலைகளைப்போல அடுத்தடுத்து கீழ்நோக்கி பாய்வது போலிருக்கும் என்று மறைமுகமாக சொல்லப்பட்டுள்ளது. திராட்சைக்கொடிகளாலும் தானியங்களாலும் நிறைந்த ஒரு நிலத்தை ஆமோஸ் கண்டார்; அவைகள் செழிப்பாக வளர்கின்றன. அதே போல் சங்கீதக்காரனும் இதை நன்றாகக் கூறுகிறார்:

**“மேடுகள் சுற்றிலும் பூரிப்பாயிருக்கிறது. மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகள் நிறைந்திருக்கிறது; பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது, அவைகள் கெம்பீரித்துப் பாடுகிறது.” (சங் 65:12, 13).**

எதிர்காலத்தைப் பற்றின இந்த ஒளிபொருந்திய தரிசனத்தை அங்கீகரிக்கும் விதமாக, பின்வரும் வசனத்தைத் தம்முடைய தீரக்கதரிசிக்குக் கூறுவதின் மூலம் அதைக் கடைசிகால வெளிப்படுத்தல் என்று கர்த்தர் முத்திரை யிடுகின்றார்.

**“என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடிப்பார்கள்.” (ஆமோஸ் 9:14) .**

எனவே, இந்தக் காட்சியின் உண்மையான பயன்பாடானது வரக்கூடிய ராஜ்ஜியத்திலிருக்கும் என்பதையும், இவ்வாறு வரக்கூடியது அதிசீக்கிரத்தில் நடக்கும் நிகழ்வு என்று நம்புவதையும் கவனிக்கும்போது, இந்த உவமையிலுள்ள நுணுக்கங்களின் மேல் நமக்கு நெருங்கிய ஆர்வமுள்ளது என்பதை நாம் இயல்பாகவே உணர்கிறோம்.

முதலாவதாக, இந்தக் காட்சியில் இரண்டு தானிய அறுவடைகளும் இரண்டு திராட்சைப்பழம் பறிக்கும் காலங்களும் உள்ளதை நாம் கவனிக்கவேண்டும்; இந்த உண்மையானது ஒருபோதும் எளிதில் உணரப்படாததாக உள்ளது.
முதல் தானிய அறுவடை ஏராளமாயுள்ளது ஆனால் இது புதிய ஆண்டின் வேலைக்காக நிலத்தை பிளக்கும் உழுகிறவனால் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. அந்த புது ஆண்டின் வேலையின் விளைவானது மற்றொரு தானிய அறுவடையும் ஏராளமாக இருப்பதினால், உச்சியில் தானியத்தால் மூடியிருக்கக்கூடிய அந்த மேடுகளின் மேல் காற்று வீசும்போது, பொன் கரைந்து போவது போலவே காட்சியளிக்கும்.

முதல் வருடத்தில் பறித்த திராட்சைப்பழங்கள் ஏராளமாயிருப்பதால் இந்த அறுவடையில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள், அடுத்த வருடத்தின் விதைப்பின் வேலை நடக்கும் சமயத்திற்குள் தலையிட நேரிடும். ஆனால் வெளிப்படையாகவே விதைப்பின் வேலை முடிவடைகிறது. பிற்பாடு, அந்த அடுத்த வருடத்தில், ஏராளமாய் பறிக்கப்பட்ட இந்த திராட்சைப்பழங்கள், கூரைக்குக் கூரை காணப்படும் திராட்சைக்கொடிகளின் திரட்சியினால் சிறந்து விளங்கி, கண்பார்க்கும் தூரம் வரை அக்கொடிகள் மலைகளை மூடி, அவற்றில் அதிகமான ஊதா நிற திராட்சை ப்பழங்களுடன் காணப்படுகின்றது. இவையெல்லாம் கூட்டிச்சேர்ப்பின் நாளை முன்கூட்டியே எதிர்பார்க்கும் விதமாக "**பர்வதங்கள் புதிய திராட்சை ரசத்தை வடிக்கிறது**" என்பது போல கவிதை நடையில் சொல்லப்பட்டுள்ளது.

ஆதலால், இந்த வேதவாக்கியத்திற்கான நம்முடைய புரிதலில், **இரண்டு தானிய அறுவடைகள்** மற்றும் **இரண்டு திராட்சைப்பழம் பறிக்கும் காலங்களுக்கான** இடத்தை நாம் கண்டுபிடிக்கவேண்டும். கர்த்தரிடம் விசுவாசமும் அவரது ஊழியத்திற்கென்று வைராக்கியமுமுள்ள, அதற்கே தங்களை தத்தம் செய்த ஜனங்களுடன் இது நெருங்கிய தொடர்புடையதாய் உள்ளது. இவை, ஆமோஸின் வார்த்தைகளுக்கும் லேவியராகமத்தில்

பதிவுசெய்யப்பட்டுள்ள இஸ்ரயேல் ஜனங்களுக்கான தேவனுடைய வாக்குத்தத்திற்கும் உள்ள வெளிப்படையான சம்பந்தத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**“நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால், நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன்; பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும். திராட்சப்பழம் பறிக்குங்காலம்வரைக்கும் போரடிப்புக்காலம் இருக்கும்; விதைப்புக்காலம் வரைக்கும் திராட்சப்பழம் பறிக்குங்காலம் இருக்கும்; நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்.” (லேவி 26:3–5)**


நாம் கருத்தில் கொள்ளவே ண்டிய ஒரு காரியம் என்னவென்றால் இந்த வாக்கியத்திற்கும் அப்போஸ்தலர் 15ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில வசனகளுக்கும் உள்ள தொடர்பே ஆகும்.

**“எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தே டும்படிக்கு, நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின்கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது.” (அப் 15:16–17)**

தேவனுடைய நித்திய ராஜ்ஜியத்தைக் கொண்டுவருவதற்கு இந்த யுகத்தின் முடிவில் நடந்துகொண்டிருப்பதான துடிப்பான வேலையில் இந்த முழு தீர்க்கதரிசனமும் இணைந்து பணியாற்றவேண்டும்.

நம்முடைய ஆதார வசனம் சுட்டிக்காட்டுகிறபடி அதில் இரண்டு அறுவடைகள் உள்ளது என்ற உணர்வே அதின் விளக்கத்தைத் தருகிறது.
இந்த **இரண்டு அறுவடைகளும் தேவனுடைய தெய்வீக திட்டத்திலுள்ள மகா யுகங்களான சுவிசேஷ யுகம் மற்றும் ஆயிரம் வருட யுகம் என்பவைகளின் வேலைப்பாட்டின் கனிகள்** என்பது தெளிவாகிறது.

# தேவனுடைய தெய்வீக திட்டம்




காலகணக்கைக் குறித்ததான எண்ணங்களை நம்முடைய கேள்வியிலிருந்து நீக்கிவிடும்போது, கர்த்தர் தம்முடைய ராஜ்ஜியத்தை அமைப்பதற்கு திரும்பவருகிறார் என்ற எதிர்பார்ப்பை மையமாகக் கொண்டு அதைச் சுற்றியே தற்போது நூற்றைம்பது வருடங்களாய் மகத்தான கிறிஸ்துவ செயல்பாடு உள்ளதென்றும், அக்காலத்திலே வேதாகம சமூகங்கள், மாணவ அமைப்புகள், மிகப்பெரிய மறுமலர்ச்சிகள் மற்றும் ஒவ்வொரு வகையான கிறிஸ்துவ சாட்சி மற்றும் செயல்பாடு ஆகிய இவைகள் மகத்தான வளர்ச்சியடைந்ததென்றும் தெளிவாகிறது.

இன்னும் அதிக உண்மையான அர்த்தத்துடன் சொன்னால், சுவிசேஷ யுகத்தின் முற்பகுதியில் விதைக்கப்பட்ட விதையானது, பத்தொன்பதாம் மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தான் அதின் அறுவடையைக் கண்டது என்று சொல்லலாம்.

ஆனால் இது ஒரு ஆவிக்குரிய வேலையாயிருக்கிறது; ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களை அடைந்து, அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் பரம அழைப்பினை முன்பை விட தற்போது இன்னும் தெளிவாகக் காட்டக்கூடியவகையில் வடிவமைக்கப்பட்ட

இத்தகைய ஊழியமே, இந்த யுகத்தின் நோக்கமாயும் நம் நினைவுகளை ஆட்டிப்படைக்கக்கூடியதுமாயுமுள்ளது.

தெய்வீக ஒழுங்கு மற்றும் வேதவியல் சார்ந்த அர்த்தத்தில் சுவிசேஷ யுக அறுவடையைப் பற்றினதான ஒருவருடைய தனிப்பட்ட நம்பிக்கை எதுவாயினும், தங்கள் கர்த்தரிடம் நெருங்கிய தனிப்பட்ட தொடர்பிலிருத்தல் மற்றும் அவர்களுக்குக் கிடைத்த பரம அழைப்பை உயர்வாக மதித்தல் என்னும் நிலைமையை அடைந்தமைக்கு, அனைத்துப் பிரிவுகளிலுமுள்ள கிறிஸ்துவ ஜனங்களின் நடைமுறை வேலைப்பாட்டைக் கொண்ட இயக்கமே காரணம் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை அவர்களால் மறுக்கமுடியாது. இது ஒரு முக்கியமான காரியமும் கூட. உலக மாற்றத்தின் யுகமான அடுத்த யுகத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதிகள் தங்களது வேலைப்பாடுகளிலிருந்து ஏராளமான பலன்களை அறுப்பார்கள். உலகத்தை மாற்றுவதில் பகுதி தோல்வியுற்றாலும், தற்போதுள்ள யுகமானது கிறிஸ்துவுக்காக ஜெயிப்பதும், எதிர்கால மிஷனரி ஊழியத்திற்கென்று தேவனுடைய நாமத்திற்காக சிறிய அளவிலான அற்பணிக்கப்பட்ட விசுவாசிகளைத் தயார்செய்வதுமே முதன்மையான நோக்கம் என்பதைக் காட்டியுள்ளது. ஆதலால், இந்த அறுவடையின்போது, உலக ஜனங்களை விட சபை அங்கத்தினர் மீதே கர்த்தர் அதிகமாக அக்கரையுள்ளவராயிருக்கிறார்.

ஆனால், ஒரு யுகமானது அதினுடைய முடிவை நோக்கிச் செல்லும் போது, புதியதொரு அம்சம் உருவாகும். பூமியில் சபையினரின் வாழ்க்கைக்கு முடிவு சமீபமாயிருக்கிறது. அதாவது கடைசியான அங்கத்தினர்கள் மகிமையடைவது அதிசீக்கிரத்தில் நடக்கவிருக்கிறது. இருப்பினும் தேவன் தம்மையே இப்பூமியின் மேல் ஒரு சாட்சியாக இல்லாமல் விட்டுவிடுவார் என்றில்லை; வரலாற்றிலுள்ள எந்த பதிவுகளிலும் அவர் அப்படி செய்ததுமில்லை. தெய்வீக திட்டத்தைப் பற்றின புரிதலைப் பெற்று, தங்கள் நம்பிக்கைகள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றை பரலோகத்திற்கு நேராக இயக்காமல் மாறாக ராஜ்ஜியத்தின் பூமிக்குரிய நிலைமையை நோக்கி இயக்கும் சிலபேர் நிச்சயமாக இருப்பார்கள் என்பது தெளிவாகிறது.

ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்கள் குறைவதால் புதிய நாளைப் பற்றின பூமிக்குரிய பிரச்சாரம் நிச்சயம் அதிகரிக்கிறது. அவர்களுடைய வேலையானது, இந்த யுகத்தின் அறுவடையை அறுக்கிறதாக இல்லாமல் மாறாக அடுத்த யுகத்திற்காக நிலத்தைத் தயார்செய்வதாயிருக்கிறது. அறுவடையின் வேலை அதன் முடிவுக்கு வரும்போது, ஆயிரம் வருடத்தின் வேலைக்காக தரிசு நிலத்தைப் பிளக்கக்கூடிய வேலையும் செயல்பாட்டிற்கு வரத்துவங்கும்.



“**உழுகிறதில் இக்கட்டுக்கான பங்கு**” என்று நாம் அழைத்தபடி, இங்குதான் அது தன்னுடைய வேலையைச் செய்யும். ஏனெனில், புது யுகத்திற்கான வேலைக்கு ஆயத்தமாகும்விதமாக நிலத்தைப் பிளப்பது என்பது போதித்தலினாலும் சாட்சியினாலும் மாத்திரம் செய்யப்படாமல், தேசங்களின் மேல்வரும் இக்கட்டினாலும் எல்லா மனிதருடைய திட்டங்களான சீர்திருத்தம் மற்றும் திரும்பகட்டுதல் ஆகியவற்றின் தோல்வியினாலும் செய்யப்பட வேண்டும். உண்மையிலேயே, **உழுகிறவனை தேசங்களின் மேல் வரும் இக்கட்டுக்கொப்பாகவும், விதை விதைத்தலை உலகம் அர்மகதோனுக்குள் கடந்துபோகும்வரை தொடர்ந்து அறிவிக்கப்படும் ராஜ்ஜியத்தின் செய்திக்கொப்பாகவும்** நினைத்துக்கொள்வதே

மிகச்சரியாக இருக்கும். எதிர்காலத்தில், மனிதரின் இருதயங்களெல்லாம் முன்னெப்போதும் இல்லாத வகையில் உழப்படப்போகிறது என்பதில் சந்தேகமில்லை .

பிற்பாடு, அறுவடை முடிவடைந்த பிறகு உழுதலானது சிலகாலம் வரை நடந்துகொண்டிருக்கும். யுகத்தின் இந்த அறுவடையானது ஒரு நூற்றாண்டுக்கு முன்பே வெளிப்படையாகத் துவக்கம்பெற்று, வல்லமையுள்ள வேலையாக மாறுகின்ற வரை படிப்படியாக முன்னேறியது. கடந்த நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் இக்கட்டை உழுகிறவன் முதன்முதலாக வெளியாக்கப்பட்டான். ஆனால் இப்போது அவன் அறுக்கிறவனை அதிவேகமாக தொடர்ந்து பிடிக்கிறான் ("நெருங்கி வருகிறான்" என்பது எபிரேயத்தில் எழுதின்படியான அர்த்தமாகும்). அதன் காரணமாக, **தேசங்களின் மேலுள்ள பொதுவான இக்கட்டின் அழுத்தத்தினால் அறுப்பின் வேலை சீராகக் குறைந்தும் நலிவடைந்தும் வருகிறது.**

**இது எத்தனை உண்மையல்லவா?**

ஆவிக்குரிய காரியங்களிலுள்ள ஆர்வத்தை அடக்கி ஒடுக்குவதே இந்த இக்கட்டு நாளின் போக்காக உள்ளது. கர்த்தரிடம் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதற்கு ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களைக் கூட்டிச்சேர்க்க நாடித்தேடுவோருக்கே பரந்து விரிந்திருக்கும் அவர்களது முயற்சியில் இன்னும் சிறிது மீதமிருக்கும். இம்மாதிரியான ஒரு முயற்சி, ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இருந்தது போல, பொதுவாக பெருந்திரளாயிருக்கிற ஜனத்தின் மத்தியில் இல்லாமல், மாறாக பரலோகக் காரியங்களை வாஞ்சித்து ஏங்குகின்றவர்களாய் கிறிஸ்தவ அமைப்புகளுக்குள் இருக்கிறவர்களிடம் காணப்படுகின்றது. இதுபோலதான், கடைசியாக இருக்கும் கோதுமை மணிகள் அறுவடையின் இறுதி மணிநேரத்திற்குள் இருப்பார்கள்.

உழுகிறவன் அறுக்கிறவனை இன்னும் தொடர்ந்து பிடிக்கவில்லை. ஆனால் அவன் மிக அருகில் வந்துகொண்டிருக்கிறான். ஒருவேளை, அதிவேகமாக வந்துகொண்டிருக்கும் அந்த உலக

அமைப்பு முழு வளர்ச்சியடைந்தவுடன், உண்மையுள்ள ஜாமக்காரர்களைத்தவிர(விழிப்புள்ளவர்கள்) மற்ற அனைவரது சிந்தனையும் செயலும், உலகப் பொருளாசை, அறிவியல் மற்றும் கிறிஸ்துவ எதிர்ப்பு என்பவைகளின் அச்சு போலவே மாறுவதற்கு அந்த அமைப்பு கட்டாயப்படுத்தும்போது (வெளி 13:14–17 –யை பார்க்கவும் – "**மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது. அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது.**"), தொடர்ந்து பிடித்தல் என்பது நிறைவுபெற்றதைக் குறிக்கும். இந்த யுகத்தில் கிறிஸ்துவ சபையின் வேலை நிறைவடைந்து, இனியும் எவ்வித நீண்ட தாமதமுமின்றி கடைசியான அங்கங்கள் மகிமையடைவார்கள். அங்குதான் அறுவடையானது முடிவுபெறும்.

ஆனாலும், வரப்போகிற பூமிக்குரிய ராஜ்ஜியத்தின் செய்தியை தொடர்ந்து சொல்பவர்கள் என்று பொருள்படும் விதையைத் தூவுகிறவர்கள் இன்னும் இருப்பார்கள். சபை எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டாலும் கூட, தேவன் தம்முடைய சாட்சிகளை இன்னமும் பூமியில் வைத்திருப்பார். ஆயிரம்வருட அரசாட்சியின் செய்தியை ஒருகணம் நின்று கவனிக்க சிலர் கூட இருக்கமாட்டார்கள் என்பதின் மூலம் வரப்போகிற பேரழிவின் அடையாளங்கள் அந்நேரத்திலே மிகத்தெளிவாக இருக்கும்.

திராட்சைப்பழங்களை ஆலையாடுகிறவனும்(ஆலையில் திராட்சையை மிதித்துப் பிழிகிறவன்) அந்நேரத்தில் மிக அருகில்

வருவான். பூமியின் அறுவடையானது (பூமியின் பயிர்) கூட்டிசேர்க்கப்பட்டு முடிந்தவுடன் **(வெளி 14:16 – "அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார், பூமியின் விளைவு அறுப்புண்டது")**, திராட்சைப்பழம் பறிக்கும் காலத்தின் முறையானது வரும். **(வெளி 14:18 – "அதிகாரமுள்ள வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டுவந்து, கருக்குள்ள அரிவாளைப் பிடித்திருக்கிறவனை நோக்கி: பூமியின் திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது, கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி, அதின் குலைகளை அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான்")**.

தேவனுடைய கோபாக்கினை என்னும் ஆலையில் திராட்சைப் பழங்களை மிதிக்கிறவரே (வெளி 19:15) இந்த பயங்கரமான வேலையைச் செய்ய முன்வருவார்.

**"ஏதோமிலும் அதிலுள்ள போஸ்றா பட்டணத்திலுமிருந்து, சாயந்தீர்ந்த வஸ்திரங்களுடை யவராகவும்,....வருகிற இவர் யார்?...."**

என்று தீர்க்கதரிசி கூக்குரலிடுகிறார் (ஏசா 63:1). இக்கேள்விக்குரிய பதிலாக, பூமியிலுள்ள தீமையான அமைப்புகளை தரைமாட்டாய்த் தாழ்த்தி, அந்த இடத்திலேயே தனக்கென ஒரு மகிமையான ராஜ்ஜியத்தை அமைத்துக்கொள்ளுகிறதான இவ்விரண்டையும் செய்கிறவரை அடையாளம் காண்பதில் எந்த சந்தேகமும் இராது. அர்மகதோனின் காலமும், யாக்கோபின் இக்கட்டுக்காலமும், வரப்போகிற நீதியின் ராஜ்ஜியத்தின் படைகளை எதிர்க்கிற தீமையின் இறுதி எழுச்சிக்காலமும் வரும் மற்றும் திராட்சைப்பழம் பறிக்கும் காலமானது விதை விதைக்கிறவர்களைத் தொடர்ந்து வந்து அவர்களின் வேலைக்கு, ஒரு காலம் வரைக்கும் தற்காலிக தடையைக் கொண்டுவரும். நீதியின் எல்லா வல்லமைகளும் செயல்பாடின்றி அமைதியாக்கப்பட்டு தரை மட்டும் நொறுக்கப்பட்டது போல் தோற்றமளிக்கக்கூடிய தீவிரமான இக்கட்டுக்காலம் இருக்கும். ஆனால் அந்த சமயத்தில் தான் பூமியின் காரியங்களில் தலையிட தேவன் தம்முடைய ஸ்தானத்திலிருந்து எழுவார்.
இப்படி அவர் தலையிடும் அக்கணத்திலிருந்துதான் வல்லமையுள்ள ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும்.

சரியாக இந்நேரத்திலிருந்துதான், உண்மையானதும் மற்றும் ஆரோக்கியம் தரும் ராஜ்ஜியத்தின் போதனைகளான புதிய(இனிமையான) திராட்சை ரசத்தைப் பர்வதங்கள் வடிக்கத் துவங்கும். "**சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.**" (ஏசா 2:3).

"**பூமியின் குலைகள்**" என்று உருவகப்படுத்தப்பட்ட பழைய கோட்பாடுகள் அகற்றப்பட்டிருக்கும்; சாத்தான் கட்டப்படுவான். எனவே, தீமைக்கு நேராக மனுக்குலத்தை இனி ஒருக்காலும் அவனால் தூண்டமுடியாது. அநேக ஜனங்களை ஒடுக்கி அடிமைப்படுத்தின, மனிதனுடைய மிகப்பெரிய நிறுவனங்களெல்லாம் முற்றிலும் அழிக்கப்பட்டு, மனிதனுடைய முந்தைய ஆளுகையின் ஒவ்வோரு அடையாளமும் அற்றுப்போகும்.

"**சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும்.**" (ஏசா 25:6).

அந்த ராஜ்ஜியத்தின் திராட்சை ரசமானது ஏராளமாயும் இலவசமாயும் இருக்கும்.

"**ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்.**" (ஏசா 55:1).

**அந்நாளில் பர்வதங்கள் கீழே வடிக்கக்கூடிய இனிமையான திராட்சை ரசம்இதுவே.**

"மேடுகளெல்லாம் கரையும்" என்பது அந்த யுகத்தின் பிற்பகுதியில் நடப்பதாகும். ஆயிரம் வருடத்தின் தானிய அறுவடையானது அதின் முழு வளர்ச்சியை அடைவதற்கு இந்த யுகம் முழுவதும் தேவைப்படும். "**நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும். பயிர் விளைந்து**

**அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான் என்றார்."** **(மாற்கு 4:28,29)**

இப்போது போலவே அப்போதும் இருந்திருக்க வேண்டும். தெய்வீக மிஷனரிகள் இந்த யுகம் முழுவதுமே, போதித்தல், அறிவுறுத்தல், ஊக்கப்படுத்தல், ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்ய பாவத்திலிருந்து மனத்திரும்பச் செய்தல் போன்ற வேலைகளில் இருப்பர். வளர்ச்சியடையாத கோதுமை மணி முழு வளர்ச்சியடைவதையும், பச்சை நிறத்திலிருந்து பொன்னிறத்திற்கு மாறுவதையும் அவர்கள் காண்பார்கள்.

ஒருநாள், உலகத்தின் கோதுமை நிலத்தின் மீது பரிசுத்த ஆவியின் தாக்கம் அதிகளவில் இருக்கும். அப்போது, நிமிர்ந்து நிற்கும் தண்டுகள், அவைகளின் மீது கடந்து செல்லும் அந்த தெய்வீக தூண்டுதலுக்கு மறுமொழியாக ஒன்றோடொன்று கலந்து அசைவாடும். இது, ஒன்றோடொன்று நெருக்கமாக இருக்கும் தாவரத்தண்டுகளின் மேல் பெரிய அலைகள் கடந்து செல்வது போல இருக்கும்.

"**பாருங்கள், அந்த குன்றுகளெல்லாம் சமவெளிகளுக்குள் பாய்ந்தோடுகிறது**"
என்று அக்காட்சியைப் பார்க்கும் ஒருவர் சொல்லலாம்.

ஆனால் அழிவு என்னும் பொருள் தரக்கூடிய கரைந்து போகுதல் இதுவாக இருக்காது. இந்தக் கரைதல் ஆனது, எல்லா மனிதருடைய இருதயங்களும் தேவனிடத்தில் தங்களை இறுதியும் முழுமையுமாய் ஒப்புவித்தலை குறிக்கிறதாயிருக்கிறது. இதுவே, சிருஷ்டிகருக்கு சிருஷ்டியின் மறுமொழியும், பூமியில் தெய்வீக ஆவியினுடைய வேலையின் கண்கூடாகத் தெரியும் விளைவுமாகும். எனவே, தீமையின் இறுதி நிழலும் தப்பியோடிப்போகும், தேவனுடைய அதிகாரதிற்கு எதிராக இருக்கும் இறுதி எதிர்ப்பும் தவிர்க்கமுடியாத விளைவை அறுக்கும். தெய்வீக பிரசன்னத்தின் மகிமையுள்ள சூரியவெளிச்சத்திற்குள் மனுஷகுமாரர்கள் பிரவேசிப்பார்கள்.

**“இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.” (ஆகாய் 2:9)**

.......... ஆமென் ............

புதுசிருஷ்டியின் பொக்கிஷசாலை

see more booklets and Reprints at
www.foodfornewcreature.com